DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 203/2019

Prosecution witness PW - 2

Name …. **வசந்தாமணி**

Father's Name ....

Village ....

Taluk ....

Caste ....

Calling ....

Religion ....

Age ….

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 14th day of November 2025.

**(எதிரிகள் ஆஜர்)**

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் எங்கள் உறவினர் என்றால் சரியல்ல, ஒரே ஊரைச் சார்ந்தவர்கள். எதிரிகள் மீது இருந்த முன்விரோதம் காரணமாக எதிரிகள் கொடுத்த புகார் செய்யாறு, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 4ம் எதிரியின் தங்கை சோனியாவிற்கு, ராஜாவிற்கும் திருமணம் நடந்தது சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். 4ம் எதிரி, ராஜாவிடம் பேசிக்கொண்டு இருந்தபோது எனது தம்பி அ.சா.1 பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல. இதை கேட்க வந்த மற்ற எதிரிகளை என் தம்பி

சிகாமணி அடித்தார் என்றால் சரியல்ல. அப்போது இருதரப்பினருக்கும் இடையே தள்ளு முள்ளு ஏற்பட்டது, அதில் இருதரப்பிரனருக்கும் சிறுகாயம் ஏற்பட்டது என்றால் அவர்கள் தான் எங்களை அடித்தார்கள். எதிரிகள் தாக்கபபட்ட காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றும், அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கு கொடுத்து தப்பிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சிப்காட்டில் பணி செய்து வருகிறேன். சம்பவம் நடந்த அன்றே விசாரணை செய்தார்களா என்றால் இல்லை, மறுநாள் காலையில் விசாரணை செய்தார்கள். அதன் பிறகு போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை, நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் புகார்தாரர் என் தம்பி என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று சிப்காட் வேலை சென்றேன்.

Taken down by me in open Court and read over / interpreted to the witness in the presence of the accused and admitted by him / her to be correct.

Sd/- N.Suresh
**Assistant Sessions Judge,**
**Cheyyar.**